. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 22.03.2026 • மலர் 04 • இதழ்: 80 • Edition : Nagercoil • 22.03.2026 • Vol : 04 • Issue : 80 • Page : 4 • Rs. 5/-

## ஒரு பக்கம்.. தொகுதி பங்கீடு; மறு பக்கம்.. விருப்ப தொகுதிகள்:

# கூட்டணி கட்சிகள் நெருக்கடி

## தி.மு.க.வுக்கு சிக்கல்





சென்னை, மார்ச். 22

தமிழகத்தில் ஆளுங் கட்சியான தி.மு.க., நடைபெற உள்ள சட்ட சபை தேர்தலில் வலுவான கூட்டணியை அமைத்துள்ளது. கடந்த (2021) சட்டசபை தேர்தலில் 13 கட்சிகளுடன் கூட்டணி அமைத்த தி.மு.க., இந்த முறை 26 கட்சிகளுடன் மெகா கூட்டணியை அமைத்துள்ளது.

தற்போது, தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடந்து வரும் நிலையில், இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28, இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, ம.தி.மு.க.வுக்கு 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2, மனிதநேய மக்கள்கட்சிக்கு 2, கொங்குநாடு மக்கள்தேசிய கட்சிக்கு 2 தொகுதிகள் என ஒதுக்கப்பட்டுள்ளன.

விடுதலை சிறுத்தைகள்கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, மக்கள்நீதி மய்யம் ஆகிய கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அவர்கள் கூடுதல் தொகுதிகள் கேட்பதால், தொகுதி பங்கீட்டில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது.

இதனால், தி.மு.க. கூட்டணிக்கு புது வரவான தே.மு.தி.க.வுடன் இன்னும் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்க முடியாத நிலை நீடிக்கிறது. மேலும், கூட்டணியில் இடம்பெற்றுள்ள சிறிய கட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் தி.மு.க. இருக்கிறது.

இப்படி, ஒரு பக்கம் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்க, மறுபக்கம் தொகுதி பங்கீட்டை முடித்த 6 கட்சிகளும், விருப்ப தொகுதிகள் பட்டியலுடன் வந்து நிற்பதால், தி.மு.க. தலைமை கடும் சிக்கலை சந்தித்து வருகிறது. இதற்கு மத்தியில், தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேர்காணல் நடத்தி வருகிறார்.

தி.மு.க.கூட்டணியில், 28 தொகுதிகளை பெற்றுக்கொண்ட காங்கிரஸ் கட்சி 39 விருப்ப தொகுதிகளின்பெயர்கள்அடங்கிய பட்டியலை கொடுத்து, அதில் இருந்து 28 தொகுதிகளை ஒதுக்க கேட்கின்றது.

காங்கிரஸ் விருப்ப தொகுதிகள் பட்டியலில், கிள்ளியூர், விளவங்கோடு, ஸ்ரீவைகுண்டம், குளச்சல், பத்மநாபபுரம், விருதுநகர், ஆலங்குளம், காரைக்குடி, ராமநாதபுரம், தென்காசி, திருவாடனை, முதுகுளத்தூர், நாங்குநேரி, ஊத்தங்கரை, முசிறி, திருநெல்வேலி, மணப்பாறை, சோளிங்கர், சிதம்பரம், மொடக்குறிச்சி, திருப்பூர் தெற்கு, வேடசந்தூர், மதுரை மத்தி, கோவை தெற்கு, மதுராந்தகம், கலசப்பாக்கம், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, மேட்டூர், வேளச்சேரி, அம்பத்தூர், எழும்பூர், பொன்னேரி, மயிலாடுதுறை, கூடலூர், கும்பகோணம், ஊட்டி, சிவகாசி, விருத்தாசலம் ஆகிய 39 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

இதேபோல், 5 தொகுதிகளை பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சி 10 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை வழங்கியுள்ளது. அதில், தளி, திருத்துறைப் பூண்டி, நாகப்பட்டினம், வால்பாறை, தொண்டாமுத்தூர், ஸ்ரீவில்லிபுத் தூர், திருப்பூர், பவானிசாகர், பழனி, சிவகங்கை ஆகிய தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

தி.மு.க. கூட்டணியில் 4 தொகுதிகளை பெற்றுள்ள ம.தி.மு.க.வும் 10 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை கொடுத்துள்ளது. அதில், மதுரை தெற்கு, திருச்சி கிழக்கு, மணப்பாறை, சாத்தூர், வேளச்சேரி, கோவில்பட்டி, கடலூர், புவனகிரி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

அதேபோல், 2 தொகுதிகளை பெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கடையநல்லூர், பாளையங்கோட்டை, பாபநாசம் ஆகிய 3 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை கொடுத்துள்ளது.

தி.மு.க.கூட்டணியில், 2 தொகுதிகள் பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி, மொடக்குறிச்சி ஆகிய 3 தொகுதிகளில் இருந்து 2ஐ கேட்கிறது. அதேபோல், 2 தொகுதிகளை பெற்றுள்ள மனிதநேய மக்கள் கட்சி, ராமநாதபுரம், திருவாடானை, ஆம்பூர், பாளையங்கோட்டை, நாகப்பட்டினம், பாபநாசம் ஆகிய 5 தொகுதிகளில் இருந்து 2ஐ கேட்கிறது.

இப்படி, தி.மு.க. கூட்டணியில் ஒரு பக்கம் தொகுதி பங்கீட்டில் சிக்கல் நீடித்து வரும் நிலையில், மற்றொரு பக்கம் தொகுதி பங்கீட்டை முடித்த கட்சிகள் விருப்பப்பட்டியலுடன் வந்து நிற்பதால், தி.மு.க. தலைமைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இன்னொரு பக்கம், தி.மு.க.வில் வேட்பாளர்நேர்காணலும்நடந்து கொண்டிருப்பதால், அதில் பங்கேற்கும் நிர்வாகிகள், முதலில் நாம் கேட்கும் தொகுதி, நம் கட்சி (தி.மு.க.) வசம் இருக்குமா? என்ற சந்தேகத்துடனேயே வந்து செல்கின்றனர்.




## தரிசன பாதையில் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடிய நபர்கள்

### அதிரடி காட்டிய திருச்செந்தூர் கோவில் நிர்வாகம்



திருச்செந்தூர், மார்ச். 22

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த 3ந் தேதி தனியார் ஒப்பந்த பாதுகாப்பு நிறுவன பணியாளர்கள் மற்றும் மேலாளர் ஆகியோர் பொதுதரிசன வரிசை பாதை கட்டிடத்தில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினர். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. கோவில் நிர்வாகம் சார்பில், ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்பட்டதாக கருதி தனியார் பாதுகாப்பு நிறுவனத்திடம் விளக்கம் கோரப்பட்டது. அந்த நிறுவனத்திடம் பெறப்பட்ட விளக்கத்தில், கடந்த 3ந் தேதி சந்திர கிரகணம் காரணமாக மதியம் 1.30 மணியளவில் கோவில் நடை சாத்திய பின்னர், 2வது ஷிப்ட் பாதுகாப்பு பணியாளர்கள் சுமார் 2.30 மணியளவில் பொது தரிசன வரிசை அறை எண் 5ல் ஒன்று கூடினர். அங்கு வைத்து மேலாளரின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடியதாக ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும், அந்த நிகழ்வு செல்போனில் பதிவு செய்யப்பட்டு சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட 4 பணியாளர்களை அந்த நிறுவனத்தினர் தற்காலிகமாக பணியிடைநீக்கம் செய்ததுடன், அவர்களுடைய 3ந் தேதியையுடைய சம்பளத் தொகையும் நிறுத்தப்பட்டுள்ளதாக தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது. எப்படியிருந்தாலும், இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடைபெறாத வகையில் பாதுகாப்பு நிறுவனத்திற்கு அபராதம் விதிக்க இணை ஆணையரால் பரிந்துரைக்கப்பட்டு, தக்கார் தீர்மானத்தின் படி ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது' என அதில் கூறப்பட்டுள்ளது.

## தொகுதி பங்கீடு குறித்து அமித்ஷா உடன் பேசவில்லை

### டிடிவி தினகரன் பேட்டி



புதுடெல்லி, மார்ச். 22

டெல்லியில் மத்திய மந்திரி அமித் ஷாவை சந்தித்தபின்அமமுகபொது செயலாளர் டிடிவி தினகரன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

என்டிஏ கூட்டணி தொகுதி பங்கீட்டை சென்னையில் இருந்து கொண்டு பேச முடியாது. டெல்லிக்கு நாங்கள் வருவது பிடிக்கவில்லையா? ஒவ்வொரு முறையும் மத்திய மந்திரிகள் சென்னை வந்து பேச முடியாத நிலையில், நாங்கள் டெல்லி சென்று பேசுகிறோம்.

அமித்ஷா உடன் தொகுதி பங்கீடு குறித்து பேசவில்லை, என்டிஏ கூட்டணியின் செயல்பாடுகள் குறித்து அமித்ஷாவிடம் பேசினேன்.

திமுகவை வீழ்த்துவதற்கான வியூகம் குறித்தும் பேசினேன். எங்கள் கூட்டணி பலமான கூட்டணி, வெற்றிக் கூட்டணி. தமிழகத்தில் என்டிஏ கூட்டணிக்கு, அதிமுக தான் தலைமை தாங்கும்.

நாங்கள் டெல்லிக்கு வந்தாலே முதல் அமைச்சர் பயப்படுகிறார். 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ரூ.12 லட்சம் கோடியை மத்திய அரசு வழங்கி உள்ளது. தவறு செய்ததால்தான் டெல்லியை கண்டு திமுக பயப்படுகிறது. பீகார் போன்று ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஒற்றுமையாக செயல்பட்டு வெற்றி பெறுவோம். டெல்லி, தமிழ்நாடு என பேசி இனியும் மக்களை ஏமாற்ற முடியாது.

எங்கள் கூட்டணி முழுமையடைந்துவிட்டது. சசிகலாவை கூட்டணிக்குள் கொண்டுவரும் எண்ணமில்லை. திமுகவிற்கு ஒரே மாற்று அதிமுக தலைமையிலான கூட்டணிதான்.

திமுக என்கிற துரியோதணக் கூட்டணியை வீழ்த்தக்கூடிய பஞ்ச பாண்டவர் கூட்டணி நாங்கள் என்றார்.

## தி.மு.க. கூட்டணியில் இருந்து தமிழக வாழ்வுரிமை கட்சி வெளியேறுகிறதா?

### நாளை முடிவு அறிவிப்பு



சென்னை, மார்ச். 22

கடந்த (2021) சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த தமிழக வாழ்வுரிமை கட்சிக்கு பண்ருட்டி தொகுதி ஒதுக்கப்பட்டது. அதில், கட்சியின் தலைவர் தி. வேல்முருகன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் தி.மு.க. கூட்டணியில் தொடரும் தமிழக வாழ்வுரிமை கட்சி, இந்த முறை 2 தொகுதிகளை எதிர்பார்ப்பதாக தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகுழுவிடம் வலியுறுத்தியது. ஆனால், கடந்தமுறையைபோலவே ஒரு தொகுதி மட்டும்தான் தர முடியும் என்று தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, தி.மு.க. கூட்டணியில் 6 கட்சிகளுடன் தொகுதி பங்கீடு முடிந்துள்ள நிலையில், ஏனைய கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. ஆனால், தமிழக வாழ்வுரிமைக் கட்சியை இன்னும் பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால், விரக்தி அடைந்த அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன், கட்சியின் உயர்மட்ட தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆலோசனையில், "இன்று (சனிக்கிழமை) ஒருநாள் பொறுத்திருந்து பார்ப்போம். தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்றால், தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவோம்" என்று நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை குழுவுக்கு விடுக்கப்பட்ட இந்த ஒரு நாள் கெடு காலத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சியை அழைக்காவிட்டால், நாளை (ஞாயிற்றுக்கிழமை) கூட்டணியை விட்டு வெளியேறும் அறிவிப்பை அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் வெளியிட இருக்கிறார். தேர்தலில், தமிழக வாழ்வுரிமைகட்சிதனித்தேபோட்டியிடும் என்று தெரிகிறது.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு சாமி தரிசனம்

திருமலை, மார்ச். 22

ஆந்திர பிரதேச முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு அவர்கள் திருப்பதி ஏழுமலையானை தரிசிப்பதற்காக இரண்டு நாள் பயணமாக நேற்று மாலை திருமலை வந்தடைந்தார். இந்த பயணம் வெறும் ஆன்மீக தரிசனமாக மட்டுமின்றி, பக்தர்களுக்கான சேவை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான பயணமாகவும் அமைந்தது.

ஆந்திர பிரதேச முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு திருமலையில் உள்ள காயத்ரி சதன் ஓய்வு இல்லத்திற்கு வந்தார். அவரை தேவஸ்தானத்தின் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள் நேரில் வந்து வரவேற்றார். இன்று அதிகாலையில் தனது குடும்பத்தினருடன் சாமி தரிசனம் செய்தார். தனது பேரன் தேவன்ஷின் பிறந்தநாளை முன்னிட்டு இந்தச் சிறப்பு தரிசனத்திற்கு வந்ததாக தெரிவித்தனர்.

திருமலைக்கு வரும் ஆயிரக்கணக்கான பக்கதர்களுக்கு ஒரு நாள் முழுவதுமான இலவச உணவு சேவையை வழங்குவதற்காக, முதல்மந்திரியின் குடும்பத்தினர் ரூ. 44 லட்சம் தொகையை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அன்னதான அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

தரிசனத்திற்கு பிறகு, வெங்கமாம்பா நித்ய அன்ன தான வளாகத்திற்கு முதல்மந்திரி வருகைதந்தார். அங்கு உணவருந்தி கொண்டிருந்த பக்தர்களுக்கு முதல்மந்திரி அவர்களே காலை உணவை பரிமாறினார்.

பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்துடன் இணைந்து கோவிலில் மக்கள் பயன்பாட்டிற்காக புதிய நீர் மற்றும் உணவு பகுப்பாய்வு ஆய்வகம் மற்றும் மாநில உணவு ஆய்வகத்தை அவர் திறந்து வைத்தார். இதன் மூலம் திருமலையில் வழங்கப்படும் உணவு மற்றும் குடிநீரின் தன்மை சர்வதேச தரத்தில் உறுதி செய்யப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுடன், தாமே நேரடியாக சேவையில் ஈடுபட்ட முதல்மந்திரின் இந்த செயல், திருமலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவிலில்
# பங்குனித்திருவிழா; நாளை கொடிக்கயிறு ஊர்வலம்

திருவட்டாறு, மார்ச். 22

திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலில் பங்குனி திருவிழா வரும் 24.ம் தேதி துவங்குகிறது. முன்னதாக நாளை 23.ம் தேதி மாலை பள்ளிக்குழி விளையில் இருந்து கொடிக்கயிறு ஊர்வலம் நடக்கிறது.

பங்குனித்திருவிழாவின்முதல்நாளான நாளான 24. ந் தேதி காலை 5 மணிக்கு ஹரி நாம கீர்த்தனம், 7.00 மணிக்கு சிறப்புஅபிஷேகம்,வழிபாடுகள்,காலை 8.45லிருந்து 9.45 மணிக்குள் பஞ்சவாத்தியங்கள் முழங்க சிறப்பு பூஜையுடன் கருட இலச்சினை பொறிக்கப்பட்ட திருக்கொடியேற்று, மாலை 6 மணிக்கு தீபாராதனை, இரவு 9 மணிக்கு சுவாமி நாற்காலி வாகனத்தில் பவனி வருதல் ஆகியன நடக்கிறது.

5.ம் நாள்(மார்ச்.28,ந்தேதி) மாலை 6.30 மணிக்கு லட்ச தீபம், இரவு 8 மணிக்கு கிருஷ்ணன் சன்னதியில் கொடியேற்று,. மற்றும் 5,6,7 திருவிழா நாள்களில் காலை 11 மணிக்கு சிறப்பு உற்சவ பலி தரிசனம், 9.ம் நாள்(ஏப்ரல்.1.ம் தேதி) இரவு 9.30 மணிக்கு தளியலில் சுவாமி பள்ளி வேட்டைக்கு எழுந்தருளல், 10.ம் நாள்(ஏப்.2.ந்தேதி) மாலை 5.30 மணிக்கு கருட வாகனத்தில் சுவாமி ஆறாட்டுக்கு மூவாற்றுமுகம் ஆற்றுக்கு எழுந்தருளல், ஆகியன நடக்கிறது.

முன்னதாக மார்ச் 23.ம் தேதியான நாளை மாலை 4.30மணிக்கு ஆற்றூர் அருகேபள்ளிகுழிவிளைபள்ளிகொண்ட காவு கோவிலிருந்து கொடிக் கயிறு மற்றும் சீர்வரிசை பொருட்களை, முத்துக்குடை, தாலப்பொலியுடன் கழுவன் திட்டை, சந்தை, தபால் நிலைய சந்திப்பு வழியாக ஊர்வலமாக எடுத்து சென்று கோவிலில் சமர்பிக்கப்படுகிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினரும், பக்தர்களும் செய்துள்ளனர்.

## ஈரோடு சித்தோட்டில்
# ஓட்டு எண்ணும் இடத்தை ஆய்வு செய்த தேர்தல் மேலிட பார்வையாளர்கள்



ஈரோடு மார்ச் 22

ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொது பார்வையாளராக மினிஸ்தி மொடக்குறிச்சி பெருந்துறை சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்தல் பொது பார்வையாளராக பார்தி தீக்ஷித் ஈரோடு மேற்கு மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் செலவின பார்வையாளராக ஹலக் கர்ராஜேஷ்நம்தேவ் ஆகியோர்நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

இவர்களும் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட ஆட்சியருமான கந்தசாமி ஆகியோர் வாக்கு எண்ணும் மையமான சித்தோடு பொறியியல் கல்லூரிக்கு சென்று பார்வையிட்டனர். அங்கு வாக்கு எண்ணுவதற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டா ர்கள். ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உதவி ஆட்சியர் பயிற்சி சகாஞ்சன் சௌதரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தேர்தல் மகேஸ்வரி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026நடைபெறுவதையொட்டிஅமைக்கப்பட்டுள்ளதருமபுரிசட்டமன்ற தேர்தல் கட்டுப்பாட்டு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி, வட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தேங்காபட்டணம் கடற்கரையில்
# தவ்ஹீத் ஜமா அத் சார்பில் ரமலான் தொழுகை



மார்த்தாண்டம், மார்ச்.22

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா அத் தேங்காய் பட்டணம் கிளை சார்பாக கிளை தலைவர் சல்மான் பாரிஸ் தலைமையில் இத்கா, கடல் கரை திடலில் ரமலான் பண்டிகை சிறப்பு தொழுகை நடைபெற்றது. இந்த சிறப்புத்தொழுகையில் 100 மேற்பட்ட ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் கலந்து கொண்டனர். தொழுகைக்கு பிறகு மாவட்ட பேச்சாளர்ஆஷிக்மிஷ்க்தொழுகையில் ஒரு அங்கமான குத்பா எனப்படும் உரை நிகழ்த்தினார்.

அவர் தன் உரையில் 30 நாட்கள் நோன்பிருந்தது இறையச்சத்தை அதிகரிப்பதற்கான ஒரு அழகிய பயிற்சி, வெறும் பசியோடும் தாகத்தோடும் இருந்ததோடு மட்டும் அல்லாமல் தவறான பேச்சுககளையும் நடவடிக்கைகளையும் விட்டு விலகி இருந்து நாம் எடுத்த பயிற்சி நம் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும் என்றார். வளைகுடா நாட்டில் பெருநாளை நிம்மதியாக கொண்டாட முடியாமல் சிக்கித்தவிக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்காக உளமாற பிரார்த்திக்கின்றோம் என்று கூறினார்.

தொடர்ந்து ஏழை எளிய மக்களும் இப்பெருநாளை சந்தோஷமாக கொண்டாட வேண்டும் எனும் நோக்கில் தொழுகைக்கு முன்னரே கட்டாயமாக கொடுக்க வேண்டிய பித்ரா எனும் தருமத்தை ஏழை எளிய மக்களுக்கு வழங்கிய மக்கள் இத் தொழுகையிலும் , அதன் பிறகான குத்பா உரையிலும்கலந்து கொண்டார்கள்,




தேர்தல்திருவிழாதமிழ்நாட்டின்பெருவிழா"தமிழ்நாடுசட்டமன்றப்பொதுதேர்தல்2026 முன்னிட்டு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், தேர்தலில் வாக்காளர்கள் 100 சதவிகிதம் வாக்கு பதிவு வலியுறுத்தி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, ஊடக மைய பொறுப்பு அலுவலர் .சு.மோகன், துணை காவல் கண்காணிப்பாளர் .ராமசந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## வடசேரி பேருந்து நிலையத்தில்
# மகளிர் சுயஉதவிக்குழுவினர் ரங்கோலி வரைந்து தேர்தல் விழிப்புணர்வு




நாகர்கோவில், மார்ச்.22

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுவதையொட்டி 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் வாக்குரிமை பெற்ற அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் வடசேரி பேருந்து நிலையத்தில் மாவட்ட மகளிர் திட்ட த்தின் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழு வினர் அதிகமானோர் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி பொதுமக்கள் மற்றும் பயணிகளிடையே ஏற்படுத்தப்பட்டது.

தேர்தல் நடைபெறும் நாளான 23.04.2026 அன்று வரை "தேர்தல் திருவிழா தேசத்தின் பெருவிழா" என்பதை வலியுறுத்தி மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ரங்கோலி வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் வாக்காளர் உறுதிமொழியினை சுயஉதவிக்குழுவினர், அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் மகளிர்திட்டம்திட்ட இயக்குநர் பத்ஹீ முகம்மது நசீர், உதவி ஆட்சியர் பயிற்சி ராகுல்குமார், ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட இயக்குநர், மகளிர் சுயஉதவிகுழு உறுப்பினர்கள் உட்பட துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# அரசுக்கு சொந்தமான மகளிர் சுய உதவி குழு கல்குவாரி செயல்பட தடையால் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்வாதாரம் பாதிப்பு
## கல்குவாரி செயல்பட மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டும் என கோரிக்கை வலியுறுத்தி ஏ.ஐ.டி.யூ.சி தொழிலாளர்கள் சார்பில் அகிம்சை போராட்டம்




தேனி மார்ச்.22

தேனி மாவட்டம் கம்பம் அருகே காமயக்கவுண்டன்பட்டியில் அரசுக்கு சொந்தமான சங்கிலிக்கரடு கல்குவாரி செயல்பட்டு வருகிறது மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் கல்குவாரி பணிகளில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்

இந்த நிலையில் கடந்த ஆறு மாத காலமாக கல்குவாரி செயல்படுவதற்கான உரிமத்தை மாவட்ட நிர்வாகம் வழங்காததால் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் சுமார் 500க்கும் மேற்பட்ட கல் உடைக்கும் தொழிலாளர்கள் குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஏ.ஐ.டி.யூ.சி சார்பில் கல்குவாரி தொழிலாளர்கள் அகிம்சை போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

கடந்த ஆறு மாத காலமாக கல்குவாரி செயல்படுவதற்கு தடை விதித்திருப்பதால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் சுமை அதிகரித்து இருப்பதாகும் அதனை நம்பி இருக்கும் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருப்பதாக கூறி அகிம்சை வழியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

கல்குவாரியை மீண்டும் செயல்படுவதற்காக உரிமத்தை மகளிர் சுய உதவி குழுவிற்கு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையை வலியுறுத்தி மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் மற்றும் ஏஐடியூசி தொழிலாளர்கள்கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.




தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026யைமுன்னிட்டுதேர்தலில்100%வாக்களிப்பதன்அவசியம்குறித்துபொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு ராட்சத பலூனை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் பறக்கவிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ், மகளிர் திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், நகராட்சி ஆணையர் வசந்தி, வட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்துக்கு
# தனித்துவ அடையாளமாக தேர்தல் அரசன் சின்னம் அறிமுகம்




ஈரோடு, மார்ச் 22

ஈரோடு மாவட்டத்துக்கு தனித்துவ அடையாளமாக 'தேர்தல் அரசன் சின்னம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு வருகிற 30ந்தேதி முதல் வேட் பாளர்கள் வேட்புமனு தாக் கல் செய்ய உள்ளனர். இதற்கி டையே ஈரோடு மாவட்ட நிர்வாகம் சார்பில் வாக்கா ளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி கள் நடத்தப்பட்டு வருகின்றன.

100 சதவீதம் வாக்குப்ப திவு என்கிற இலக்கை மைய மாக கொண்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரி யும் கலெக்டருமான சுந்த சாமி தலைமையில் அனைத்து துறைகள் சார்பில் இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

அதன்படி ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் மகளிர் திட்டம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி கள் நடத்தப் பட்டன. மகளிர் திட்டத்துக் குட்பட்ட மகளிர் குழுக்களை சேர்ந்த பெண்களுக்கான வாக்காளர் விழிப்புணர்வு கோலப்போட்டி நடக்கப்பட்டது. இதனால் கலெக்டர் அலுவலக வளாகம் கோலங்களால் நிரம்பியது. இந்த கோலங்களை கலெக் டர் கந்தசாமி பார்வையிட்டு பாராட்டினார். இதில் சிறந்த பெண்களுக்கு கலெக்டர் புத்தகங்கள் பரிசு வழங்கினார்.

தமிழ்நாடு பொதுத்தேர்தலுக்காக மாவட்டம் வாரியாக தனித்துவமான சின்னங்கள் அறிமுகப்படுத்தப் பட் டு உள்ளன. அதன்படி ஈரோடு மாவட்டத்துக்கு சிங்க முகத்துடன் கூடிய'தேர்தல் அர சன்' சின்னம் தனித்துவ அடையாளமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தனித்துவ சின்னத்தை பத்ம பூஷன் விருது பெற்ற எஸ்கே எம்.மயிலானந்தன் முன்னி லையில் கலெக்டர் கந்தசாமி அறிமுகப்படுத்தினார்.

அப்போது கலெக்டர் கந்தசாமி கூறும்போது, 'ஈரோடு மாவட்டம் 40 சதவீதம் காடு பகுதியை கொண்டது. சத்திய புலிகள் காப்பகம் தந்தை பெரியார் வனவிலங்குகள் சரணாலயம் ஆகியவை நமது மாவட்டத்தில் உள்ளன. நமது மாவட்டத்தில் உள்ள காடுகளில் புலிகள் உள்பட பல்வேறு விலங்குகள் உள்ளன. சிங்கம் நமது காட்டில் இல்லை என்றாலும் காட்டுக்கு அரசன் சிங்கம் தான் . அதுபோல ஜனநாயகத் தில் வாக்காளர்கள் தான் சிங்கம். எனவேதான் சிங்கம் வாக்களித்து விட்டு வந்து விரல்களை உயர்த்தி காட்டுவ து போல தேர்தல் அரசன் என் கிற சின்னத்தை வெளியிட் டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

## தேவதானப்பட்டி 7வது வார்டில்
# சாக்கடை நீர் கலப்பு பொதுமக்கள் அவதி

தேனி, மார்ச். 22

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி பேரூராட்சிக் குட்பட்ட 7வது வார்டில் சாக்கடை அடைப்பு காரணமாக கழிவுநீர் தெருவில் ஓடி வருகிறது. மேலும், அந்தச்சாக்கடை அருகிலேயே குடிநீர் குழாய் இருப்பதால், குடிநீரில் கலப்பு ஏற்படும் அபாயம் நிலவுகிறது. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் அதே இடத்தில் இருந்து குடிநீர் எடுத்து பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். சுகாதார பாதிப்பு ஏற்படும் சூழல் நிலவுவதாக பொதுமக்கள் வேதனை தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுத்து சாக்கடை அடைப்பை சரிசெய்யவும், பாதுகாப்பான குடிநீர் வழங்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்முன்வரவேண்டும்எனபொதுமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.



### தஞ்சாவூரில்

# தேர்தல் அலுவலர்களுடன் பார்வையாளர்கள் கலந்தாய்வு



தஞ்சாவூர் மார்ச் 22

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக த்தில் தேர்தல் பார்வையாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரு மான பிரியங்கா பங்கஜம் தலைமை வகித்தார். இதில் தஞ்சாவூர் மாவட்டத் தில் தேர்தல் பணிகளை யும், செலவு களை யும், கண்காணிக்க இந்திய தேர்தல் ஆணையத்தால் திருவிடைமருதூர் (தனி ) ,கும்பகோணம் தொகுதிக்கான புது பார் வையாளர் அருண்குமார், செல வின பார் வையாளர் சோமண்ணா, பாபநாசம், திருவை யாறு தொகுதிக்கா ன பொது பார்வை யாளர் கேஷ்வேந்திர குமார், செலவின பார்வையாளர் சஞ்சீவ் குமார், தஞ்சாவூர், ஒரத்த நாடு தொகுதிகளு க்கான பொது பார் வையாளர் திவேஷ் செஹரா ,செலவின பார்வையாளர் அஸ் வினி குமார் சிங்கால், பட்டுக்கோட்டை, பேராவூர ணி தொகுதிக்கு பொது பார் வையாள ர் சர்ஜித் கவுர், செல வின பார் வையாளர் ஹேமங் ஃபூகன் 8 தொகுதிக ளுக்கான தேர்தல் காவல் மேற்பார்வையாளர் குமார் சவுரப் ஆகி யோர் தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டச பை தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தொடர்பு அலுவலர் கள், பறக்கும்படையி னர், நிலையானகண் காணிப்புக்குழு அலுவலர்கள்மற்றும் காவல்துறையினருடன்கலந்தாய்வு மேற் கொண்டார். நிகழ்ச்சியில் மாவட்ட வரு வாய் அலுவலர் தியாகராஜன், மாவட் ட திட்ட இயக்குனர் பாலகணேஷ் உள்ளி ட்டோர் கலந்து கொண்டனர்

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்

# இஸ்லாமிய சனநாயக பேரவை நடத்தும் புனித ரமலான் இஃப்த்தார் நோம்பு நிகழ்ச்சி



வேலூர், மார்ச்22

வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பஸ் நிலையம் அருகில் அமைந்துள்ள நாராயண திருமண மண்டபத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இஸ்லாமிய சனநாயக பேரவை நடத்தும் புனித ரமலான் இஃப்த்தார் நோம்பு நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வன்னிய ராஜா பகுதி செயலாளர் திமுக, சுனில் குமார் துணை மேயர் வேலூர் மாநகராட்சி, மற்றும் பரமசிவம் பகுதி செயலாளர் திமுக, ராஜேஷ் கண்ணா, காங்கிரஸ் ரவி, பாலகுமார், ஜான் பீட்டர், கோபி, இளங்கோ,சிவராமன்,ஜீவா,சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.இந்த நிகழ்ச்சி மன்சூர் மாவட்ட பொறுப்பாளர் இஸ்லாமிய சனநாயக பேரவை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மேலும் வி. எஸ். பிரேம்குமார் மாவட்ட துணைச் செயலாளர் வி. சி.க வரவேற்புரை வழங்கினார். மேலும் நீல. சந்திரகுமார் மாநில அமைப்பு செயலாளர்விசிக,செல்லப்பாண்டியன் மாநில கருத்தியல் பரப்பு செயலாளர், வேலூர் பிலிப் விசிக மாவட்ட செயலாளர் காட்பாடி தொகுதி, தமிழ்மாறன்,வெற்றி வளவன், பிரபுதாஸ், இளங்கோ, கோட்டி( எ) கோவந்தன், வெங்கடேசன், நாகராஜ், செல்வம், ஜாபிர், ரகு ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்து இருந்தனர். இதில் ஏராளமான இஸ்லாமிய பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தேவதானப்பட்டியில்

# தங்களை தாண்டி மனிதநேயம் மலர்ந்த தருணம் – ஒற்றுமையின் உண்மை முகம்!



தேனி, மார்ச். 22

21.03.2026 ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, தேனி மாவட்டம் தேவதா னப்பட்டியில் தொழுகையை முடித்து வீடு திரும்பிய முஸ்லீம் மக்களுக்கு பேரூ ராட்சி தற்காலிக ஊழியர்கள் கார்த்திக், முருகேசன், ஆசிப் ஆகியோர் அன்புடன் வாழ்த்துகள் தெரிவித்து குளிர்பானம் வழங்கினர்.

மத எல்லைகளை மறந்து மனிதநே யத்தை முன்னிறுத்திய இந்த சிறிய செயல், பெரிய செய்தியை சமூகத்துக்கு எடுத்துரைக்கிறது. இனம், மதம் என்ற பேதங்களை கடந்தும் மனி தர்கள் ஒருவருக்கொருவர் அன்பு காட் டும் போது தான் உண்மையான ஒற்றுமை உருவாகிறது என்பதற்கு இது ஒரு உயிர்ப் பான சான்றாகும்.

இத்தகைய செயல்கள் சமூக நல்லிணக் கத்தை வலுப்படுத்துவதோடு, அடுத்த தலைமுறைக்கும் ஒற்றுமையின் மதிப்பை உணர்த்தும் ஒரு சிறந்த முன்மா திரியாகும். “மனிதநேயம் தான் உயர்ந்த மதம்” என்பதைக் கண்ணுக்கு காண்பித்த அழகான நிகழ்வாக இது அமைந்துள்ளது.

### புதுக்கடை பகுதியில்

# தேர்தல் விதிமுறை மீறல்

## பாஜ, காங்கிரஸ், தவெக, நாதக மீது வழக்கு

புதுக்கடை, மார்ச்.22

புதுக்கடை அருகே காப்புக்காடு சந்திப்பு பகுதியில் வசிப்பவர்ஜெரோவின்(29). இவர் த வெ க கட்சியின் உறுப்பினர் . இவர் தேர்தல் தேதி அறிவித்த பின்னர் கட்சியின் சின்னத்துடன் கொடியை பொதுமக்கள் பார்வைக்கு கம்பத்தில் கட்டி வைத்திருந்தார். புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்தனர். தேங்காப்பட்டணம் பகுதியை சேர்ந்தவர் சதீஷ் ராஜன்(45). மீனவரான இவர் சம்பவ இடத்தில் உள்ள தமிழக வெற்றிக்கழக கட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வையில் படும்படியாக கொடி மற்றும் கட்சி தலைவரின் படம் பதித்த பிளக்ஸ் போர்டுகள் வைத்துள்ளார். அவற்றை பறிமுதல் செய்து அவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கைசூண்டிசந்திப்புபகுதியில்உள்ளவர்வின்சென்ட் ராஜி (42) இவர் தனது வீட்டின் முன்பு பொதுமக்கள் பார்வைக்கு பார்வையில் படும்படியாக அரசு உத்தரவை மீறி நாம் தமிழர் கட்சியின் கொடியை, கொடி கம்பத்தில் கட்டி வைத்துள்ளார். இது குறித்து புதுக்கடை போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

மேலும் குன்னத்துார் சந்திப்பு பகுதியில் உள்ள ஒரு கோயில் அருகே பாரதிய ஜனதா கட்சியின் கொடி கம்பத்தில் கட்டி கொடி கட்டி வைக்கப்பட்டது. இது தொடர்பாக சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் என்பவர் பறிமுதல் செய்து கட்சி உறுப்பினர் மணிகண்டன் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தார்.

இதுபோன்று பார்த்திபபுரம் பகுதியில் உள்ள ஆனந்த் என்பவரின் காலிமனை காம்பவுண்ட் சுவரில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்பு காங்கிரஸ் சார்பில் சுவர் விளம்பரம் பொதுமக்கள் பார்வையில் படும்படியாக செய்யப்பட்டுள்ளது. இது குறித்து புதுக்கடை போலீசார் காங்கிரஸ் கட்சியின் வட்டாரத் தலைவர் ரகுபதி என்பவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

### தருமபுரியில்

# ரம்ஜான் பண்டிகை சிறப்பு தொழுகை; முஸ்லிம்கள் புத்தாடை அணிந்து பங்கேற்பு



தருமபுரி மார்ச் 22

தருமபுரியில் ரம்ஜான் பண்டிகையையொட்டி நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஏராளமான முஸ் லிம்கள் புத்தாடை அணிந்து பங்கேற்றனர். ரம்ஜான் பண்டிகை முஸ்லிம்களின் முக்கிய பண்டி கைகளில் ஒன்றான ரம்ஜான் பண்டிகை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த ரம்ஜான் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் தரு மபுரி மாவட்டத்திலும் கொண்டாடப்பட்டது. இதை யொட்டி அனைத்து பகுதிகளிலும் ரம்ஜான் பண் டிகை சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் அந்தந்த பகுதியை சேர்ந்த ஏராளமான முஸ்லிம்கள் புத்தாடை அணிந்து கலந்து கொண்டனர். தொழுகை முடிந்து ஒருவருக்கு ஒருவர் கட்டித் தழுவி ரம்ஜான் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். தருமபுரிநகரஅனைத்துமசூதிகளின்கூட்டமைப்பின் சார்பில் தருமபுரி கிருஷ்ணகிரி மெயின் ரோட்டில் உள்ள ஈத்கா ஏரிக்கரையில் ரம்ஜான் பண்டிகை சிறப்பு தொழுகை நடைபெற்றது. இந்த சிறப்பு தொழுகை யில் தருமபுரி மாவட்ட தலைமை ஹாஜி பதல கரீம் கலந்து கொண்டார். இதில் ஆயிரக்கணக்கான முஸ் லிம்கள் புத்தாடை அணிந்து பங்கேற்றனர். சிறப்பு தொழுகை முடிந்த பின்னர் அவர்கள் ஒருவருக்கு ஒரு வர் கட்டித் தழுவி ரம்ஜான் நல்வாழ்த்துக்களை பரி மாறிக் கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட முத்தவல்லிகள் சங்கத் தலைவர் ஜப்பார், நகர அனைத்து மசூதிகளின் கூட்டமைப்பின்செயலாளரும், தமிழ்நாடு அனைத்து மசூதிகளின் ஐக்கிய ஜமாத் மாநில துணை செயலா ளருமான எக்பால், தலைவர் முனவர் ஜான், பொரு ளாளர் முஸ்தாக், துணை தலைவர் பாபு மற்றும் நிர் வாகிகள் செய்து இருந்தனர். தொடர்ந்து முஸ்லிம்கள் ஏழைகளுக்கு அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த சிறப்பு தொழுகையை முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பணியில் ஈடுபட்டிருந்தனர். பாலக்கோடு பென்னாகரம் இதேபோன்று தருமபுரி டேகிஸ் பேட்டை, கீழ் மசூதி தெரு , முகமதுஅலிகிளப் ரோடு, மதிகோன்பாளையம், வி. ஜெட்டிஅள்ளி, வட்டார வளர்ச்சி காலனி, அண்ணா நகர் ஆகிய இடங்களில் உள்ள மசூதிகள் மற்றும் தருமபுரி நகரை சுற்றியுள்ள அனைத்து மசூதிகளிலும் ரம்ஜான் பண் டிகை சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் அந் தந்த பகுதியை சேர்ந்த முஸ்லிம்கள் பங்கேற்றனர். இதேபோல் மாவட்டத்தின் முக்கிய பகுதிகளான தொப்பூர், பாலக்கோடு, பென்னாகரம், காரிமங்க லம், பாப்பாரப்பட்டி, ஏரியூர், நல்லம்பள்ளி, கடத் தூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், மொரப்பூர், கம் பைநல்லூர், மாரண்டஹள்ளி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள மசூதிகள் மற்றும் பள்ளிவாசல் களில் ரம்ஜான் பண்டிகை சிறப்புத் தொழுகை நடை பெற்றது . இதில் ஏராளமான முஸ்லிம்கள் கலந்து கொண்டு சிறப்புத் தொழுகை நடத்தினர். இந்த ரம் ஜான் பண்டிகை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள மசூதிகள் மற்றும் பள்ளிவாசல்கள் வண்ண மின்வி ளக்குகளால் ஜொலித்தது. ரம்ஜான் பண்டிகை முன் னிட்டு அனைத்து இறைச்சி கடைகளிலும் கூட்டம் அலைமோதியது.



திருப்பத்தூர் மாவட்டம் புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 23 ஏப்ரல் 2026 அன்று நடைபெற உள்ளதையொட்டி, வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருப்பத்தூர் நகராட்சித் துறையின் மூலம் ரங்கோலி கோலம், வாக்காளர் உறுதி மொழி, பேருந்துகளில் சுவரொட்டிகள் ஒட்டுதல் மற்றும் பொதுமக்களிடையே துண்டு பிரசுரம் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. உடன் மகளிர் திட்ட இயக்குநர் விஜயகுமாரி, உதவி திட்ட அலுவலர், நகராட்சி ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### தஞ்சாவூரில்

# கரகாட்டம், மயிலாட்டத்துடன் வாக்காளர் விழிப்புணர்வு




தஞ்சாவூர் மார்ச் .22

தஞ்சாவூரில் கரகாட்டம் மயிலாட்டத் துடன் வாக்காளர் விழிப்புணர் வு ஊர்வ லம் நடைபெற் றது.

தமிழகத்தில் சட்ட சபை தேர்தல் அடுத்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடக் கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்ட சபை தொகுதிகளில் உள்ளன. இந்த 8 தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்க ளிக்க வலியுறுத்தி, மாவட்ட நிர்வாகம் சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம் தஞ்சா வூர் பெரிய கோவி லில் இருந்து புறப்பட் டது இந்த ஊர்வலத்தை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட கலெக்டர்ருமான பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்து,100 சதவீ தம் வாக்களிக்க வலியுறுத்தி துண்டு பிர சுரங்களை பொதுமக் களுக்கு விநியோ கம் செய்தார். பின்னர் மேள தாளம் முழங்க, கரகாட்டம், மயி லாட்டம், மாடு ஆட்டத்துடன் இந்த ஊர் வலம் புறப்பட்டு, சோழன் சிலை முன்பு நிறைவடைந்தது .இதை யடுத்து மெய் யன், மெய்யாள் என்னும் விழிப்புணர்வு தலையாட் டி பொம்மையை திறந்து வைத்த கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நிருபர்களிடம் கூறியதா வது: தஞ் சாவூர் மாவட்டத்தில் தேர்தல் தூதர்களாக மெய்யன், மெய்யாள் என்ற தஞ்சாவூரின் பழமையான தலையாட்டி பொம் மையை வைத்திரு க்கிறோம். மெய்யன், மெய்யாள் என்ற பெயரி ல் அர்த்தம் உண்மை. தேர்தல் மை எப்படி வலிமை யானது .அது எப்படி நேர்மையாக வாக்க ளிக்க வேண்டும் என்பதே பறைசாற்று வத ற்காக அந்த பெயரை தேர்தல் தூதர்களுக்கு வைத்திருக்கிறோம். முதல் தலைமுறை வாக்காளர்கள்,

பெண் கள் என அனைத்து தரப்பினரும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 100 சதவீத ம் வாக்களிக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறி னார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், வரு வாய்கோட்டாட்சியர்நித்யா,மாநகராட்சி ஆணையர் கண்ணன், துணை கலெக்டர் பயிற்சிகமலேஷ்,தாசில்தார்சிவக்குமார், மாவட்டசுற்றுலா அலுவலர் வரதராஜன், , மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் பாரதி மற்றும் பலர் கலந்து கொண்ட னர்



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்கு சாவடி மையமான பேயன்விளை கே.ஏ.மேனிலைப் பள்ளியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், இன்று பார்வையிட்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு திருவைகுண்டம்சட்டமன்றதொகுதிக்குட்பட்டவாக்குசாவடிகளில்அவசரதேவைக்காக பயன்படுத்தக்கூடிய வாக்கு பதிவு இயந்திரங்கள் வைப்பதற்காக திருவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத்,இன்று பார்வையிட்டார்.

### ஆக்சிலியம் கல்லூரியில்

## நாட்டு நலப்பணி திட்டம் ஐம்பதாவது ஆண்டு விழா



வேலூர், மார்ச்22

வேலூர் மாவட்டம் காட்பாடி ஆக்சிலியம் மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் துவங்கி ஐம்பதாவது ஆண்டு விழா கல்லூரி முதல்வர் அருட்சகோதரி ஆரோக்கிய ஜெயசீலி தலைமையில் நடைபெற்றது. கல்லூரி தாளாளர் அருட் சகோதரி மேரி ஜோஸ்வின் ராணி, துணை முதல்வர் அமலாவளர்மதி முன்னிலை வகித்தனர். மாநில நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் குணாநிதி, திருவள்ளுவர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் விஜயானந்த், விஐடி பல்கலைக் கழகநாட்டுநலபணிதிட்டஅலுவலர்ஜெயகிருஷ்ணன் மற்றும் மருத்துவரும் முன்னாள் மாணவியான நடிகை ரேச்சல் ரெபேக்கா சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இதில் முன்னாள் நாட்டு நலப்பணி திட்ட மாணவ அலுவலர்கள் தொண்டர்கள், தன்னார்வலர்கள் கவுரவிக்கப்பட்டனர். முன்னதாக சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வினை நாட்டு நல பணி திட்ட அலுவலர்கள் பேராசிரியர்கள் அமுதா, காயத்ரி, அஸ்வினி, தனபாக்கியம், அனுராதா ஒருங்கிணைத்தனர்.

### விளாத்திகுளத்தில்

## தேர்தல் செலவினம் குறித்த அனைத்து கட்சி ஆலோசனைக் கூட்டம்



விளாத்திகுளம் மார்ச் 22.

விளாத்திகுளம் தாலுகா அலுவலகத்தில் வைத்து தேர்தல் செலவு செய்வது தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தேர்தல் செலவின பார்வையாளர் ஷிவ்பிரசாத்பால் கலந்து கொண்டு தேர்தலில் அரசியல் கட்சியினர் செலவு செய்வதுதொடர்பாகவும்,வங்கிகணக்குபராமரிப்பது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் விளாத்திகுளம் தேர்தல் நடத்தும் அலுவலர்உஷா,உதவிதேர்தல்நடத்தும்அலுவலர்கள் கண்ணன்,சுபா, உதவி தேர்தல் செலவின பார்வையாளர் சோமசுந்தரம், தேர்தல் துணை தாசில்தார் ஆரோக்கியமணி, விளாத்திகுளம் காவல் துணை கண்காணிப்பாளர் சுந்தரபாண்டியன், காவல் ஆய்வாளர் சக்திவேல் உட்பட ஆங்கிரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தொகுதி போச்சம்பள்ளி பேருந்து நிலையத்தில் தனியார் மருத்துவமனை அரசு திட்டங்களை விளம்பரப்படுத்தும் விதமாக புதிதாக பேனர் அமைக்கப்பட்டுள்ளது தமிழக அரசின் கோபுர சிம்பல் மக்கள் நல்வாழ்வு துறை மருத்துவம் என்ற தலைப்பில் சுகாதாரத் துறையின் மருத்துவ சேவைகள் அரசு திட்டங்களை தனியார் மருத்துவமனை தேர்தல் நேரத்தில் பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பார்வைக்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது தேர்தல் ஆணையம் அதிகாரிகள்ஆய்வுசெய்துநடவடிக்கைஎடுக்ககோரிக்கை. அரசு திட்டங்களை விளம்பரப்படுத்திய தனியார் மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்க பொது மக்களின் கோரிக்கை

## குன்னூர் பகுதியில் ஊதா நிற முட்டைக்கோஸ் விளைச்சல் அதிகரிப்பு



நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் உள்ள கேத்தி பாலாடா, குன்னக் கம்பை, சேலாஸ், மஞ்சக்கம்பை, காசோலை,ஆறுகுச்சி, மேலூர் மற்றும் அரையட்டி பகுதிகளில் மலைத் தோட்ட காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பகுதியில் பீட்ரூட், உருளைக்கிழங்கு, கேரட்,முட்டைகோஸ், காலிப்ளவர்,பீன்ஸ் ,வெள்ளைப் பூண்டு, மேரா காய் உள்ளிட்ட காய்கறிகள் பயிரிடப் பட்டு வருகிறது. தற்போது மேட்டுப்பாங்கான பகுதிகளில் ஊதா கலரில் விளை விக்கப்படும் முட்டைக் கோசுகளுக்கு அதிக அளவில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்த வகையான முட்டைக்கோசுகள் மேற்கண்ட இடங்களில் அதிக அளவில் பயிரிடப்பட்டு தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது.கடந்த காலங்களை போல் இந்த ஆண்டும் இந்த வகை முட்டைகோஸ் விலை எதிர்பார்த்தபடி கூடுதலாக கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் பொது பார்வையாளர், செலவின கணக்கு பார்வையாளர் மற்றும் காவல் பார்வையாளர்கள் நியமனம்: தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் தகவல்



கடலூர், மார்ச். 22

கடலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில்

இந்திய தேர்தல் ஆணையத்தால் சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 கண்காணித்திட பொதுப் பார்வையாளர் களாக 151 திட்டக்குடி, 152 விருத் தாசலம், 153 நெய்வேலி ஆகிய சட்டமன்ற தொகுதி களுக்கு குஹா பூனம் தபஸ் குமார் (8300697289), 154 பண்ருட்டி, 155 கடலூர் மற்றும் 156குறிஞ்சிப்பாடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு ப்ரீத்தி ஜெயின், 157 புவனகிரி, 158 சிதம்பரம் மற்றும் 159காட்டுமன்னார்கோயில் ஆகிய சட்டமன்ற தொகுதி களுக்கு கார்த்திகேய தன்ஜி நியமிக்கப்பட்டுள்ளனர்.

செலவின கணக்கு பார்வையாளர்களாக 151 திட்டக்குடி மற்றும் 152 விருத்தாசலம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு ஷர்வன் ராம் , 153 நெய்வேலி மற்றும் 154 பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு அமித் குமார் சிங் 155 கடலூர் மற்றும் 156குறிஞ்சிப்பாடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு சகில் குமார் பன்சால் அவர்களும் 157புவனகிரி மற்றும் 158 சிதம்பரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு சந்திர பானு மாண்டல் , 159 காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதிக்கு சுரேந்தர் குமார் ஜாதவ் , மேலும், காவல்துறை பார்வையாளராக ஹேமந்த் குட்டியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களிடம் மேற்கொள்ளப் பட்டுவரும் தேர்தல் பணிகள் குறித்து கேட்டறிந்தனர். சட்டமன்ற பொதுத்தேர்தலை நியாயமாகவும், சிறப்பாகவும் வாக்காளர்களுக்கு எவ்வித அச்சுறுத்தலின்றியும் சுதந்திரமாக தேர்தலை நடத்திட அனைத்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினர்.

தொடர்ந்து மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை, ஊடக கண்காணிப்பு அறை, சமூக வலைதளம் கண்காணிப்பு பிரிவு, தபால் வாக்கு பிரிவு ஆகியவற்றினை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். முன்னதாக மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்து குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக 100 சதவீதம் வாக்குபதிவு குறித்தும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போடப்பட்டிருந்த விழிப்புணர்வு கோலங்களை பார்வையிட்டனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள பார்வையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கு சென்று தங்களது பணிகளை மேற்கொள்ள உள்ளனர் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் கூட்டத்தின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருநாவுக்கரசு, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், கண்காணிப்புக் குழு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் திமுக மத்திய மாவட்ட சார்பில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி




திருப்பூர் மார்ச் 22

இஸ்லாமியர்களின் புனிதமான மாதமான ரம்ஜான் மாதத்தை முன்னிட்டு இஸ்லாமியர்கள் நோன்பு நோற்று வருகின்றனர்.மேலும் மேலும் சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அனைத்து சமுதாய மக்களுடன் சேர்ந்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர் திருப்பூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் பெரிய தோட்டம் வீதியில் 1000 பேர் பங்கேற்ற நோன்பு திறப்பு விழா மத்திய மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் க.செல்வராஜ் எம்எல்ஏ வழிகாட்டுதலின்படி நடைபெற்றது இதில் தெற்கு மாநகர செயலாளர் டி கே டி நாகராஜ். பகுதி செயலாளர் உசேன். மாநகர மாணவரணி அமைப்பாளர் செ திலகராஜ். கழக பொதுக்குழு உறுப்பினர்கள் மஸ்ஊது. சலீம். இந்திய தேசிய காங்கிரஸ் திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர் கோபால்சாமி. கவுன்சிலர் பெனாசீர் நசுருதீன் உள்ளிட்ட அனைத்து பள்ளிவாசல் தலைவர்கள். திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## சோழவந்தான் கீழமாத்தூர் பகுதி பள்ளிவாசல்களில் புனித ரம்ஜான் பெருநாள் சிறப்பு தொழுகை: ஏராளமான முஸ்லிம்கள் பங்கேற்பு



மதுரை மாவட்டம் சோழவந்தான் நைனார் ஜும்மா தொழுகை பள்ளிவாசலில் புனித ரமலான் பண்டிகை முன்னிட்டு ஏராளமான முஸ்லிம்கள் சிறப்புத் தொழுகையில் பங்கேற்றனர் அனைவரும் தொழுகையில் ஈத் முபாரக் ரம்ஜான் பெருநாள் வாழ்த்துக்கள் மகிழ்ச்சியுடன் பரிமாறிக் கொண்டனர் புனித ரம்ஜான் திருநாளை முன்னிட்டு பள்ளிவாசலில் ஜமாத் தலைவர் ஷாகுல் ஹமீது செயலாளர் முகமது உசேன் பொருளாளர் அக்பர் அலி முன்னிலையில் இஸ்லாமியர்கள் இளைஞர் நற்பணி மன்றத்தினர் அதிகமானோர் கூடினர் பள்ளிவாசலில் ஹஜ்ரத் தெள பீக் நைனார் புனித ரம்ஜான் மாதத்தின் 30 நாள் நோன்பின் l மகத்துவத்தை அல்லாஹ்வுக்காக நியத் வைத்தவர்களுக்கும் சொர்க்கம் புனிதமாக்கப்படும் சதக்கத்துல் பித்ரு ரமலான் தொழுகையில் அன்பு பண்பும் மனிதநேயமும் மகிழ்ச்சியும் உலக சமாதானம் பெற உலக மக்கள் பூரண நலம் பெற வேண்டிய நிம்மதி பெறவும் அனைவரும் அல்லாஹ்விடம் துவா செய்வோம் என பயான் செய்து புனித ரமலான் பெருநாள் சிறப்பு தொழுகையை சிறப்பாக நடத்தினார் தொழுகையில் துவா செய்து ஒருவரை ஒருவர் கட்டி தழுவி ஈத் முபாரக் பெருநாள் வாழ்த்துக்கள் கூறி சந்தோஷத்துடன் பண்டிகையை கொண்டாடினர் சோழவந்தான் பகுதியில் அனைத்து தரப்பினரும் ஜாதி மதம் பாராமல் அனைவரும் புனித ரமலான் பெருநாள் வாழ்த்துக்களை சலாம் கூறி மகிழ்ந்தனர் இந்த நிகழ்ச்சிமத நல்லிணக்கத்த காட்டுவகையில் அமைந்திருந்தது பெருமை வாய்ந்தது உப தலைவர் ஜாகிர் உசேன் இணைச் செயலாளர் நாசர் அலி மற்றும் ஜமாத்தார்கள் சார்பில் அனைத்து மக்களுக்கும் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது ரம்ஜான் ஈகை திருநாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு ஜக்காத் எனும் தர்மம் வழங்கும்நிகழ்ச்சி நடந்தது கீழ மாத்தூர் தொழுகை பள்ளிவாசலில் புனித ரம்ஜான் பெருநாளை முன்னிட்டு ஜமாத் கமிட்டியினர் ஏராளமானோர் திருக்குர்ஆன் நன்னூல் பைத் ஓதிக்கொண்டு ஈத் கா பள்ளிவாசலில் ஊர்வலமாக வந்தனர் அங்கு பள்ளிவாசல் ஹஜரத் அப்துல் காதர் புனித ரமலான் சிறப்பு தொழுகையை நடத்தினார் ஏராளமான முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் துவா செய்து ஈத் முபாரக் வாழ்த்துக்கள் சலாம் கூறி ரம்ஜான் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர் இதுபோல் முள்ளி பள்ளம் தேனூர் வாடிப்பட்டி சமயநல்லூர் விளாங்குடி கட்டக்குளம் கச்சை கட்டி மேலமாத்தூர் திருவாளவாயநல்லூர் நாச்சிகுளம் கருப்பட்டி ஆகிய பள்ளிவாசல்களில் ஏராளமான முஸ்லிம்கள் புனித ரம்ஜான் பண்டிகையை சிறப்பு தொழுகையுடன் மகிழ்ச்சியுடன் சமூக நல்லிணக்கத்துடன் கொண்டாடினர்

## மேட்டூர் அருகே மேச்சேரியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் உரிய ஆவணம் கொண்டு வந்த 24 தங்க நாணயங்கள் பறிமுதல்




மேட்டூர் அருகே மேச்சேரியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி செந்தில்ராஜாதலைமையில்போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது தர்மபுரி பகுதியில் இருந்து மேட்டூர் நோக்கி வந்த காரை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். அதில் முருகன்(51) என்பவர் உரிய ஆவணம் இன்றி எடுத்து வந்த 24 தங்க நாணயங்களை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். இதில் 8 கிராமில் நான்கும், 5 கிராமில் ஒன்றும், 4 கிராமில் 19 நாணயங்கள் இருந்தன. இவற்றின்மதிப்பு 15லட்சம் ரூபாய் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் பறிமுதல் செய்யப்பட்ட தங்க நாணயங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரும், மேட்டூர் கோட்டாட்சியர் சுகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டது.



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி சக்குடி பூவந்தி சாலையில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையின் போது ஆவணங்களின்றி கொண்டுவரப்பட்ட ரூபாய் 27 லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் தேர்தல் பறக்கும் படையினர் கைப்பற்றப்பட்டு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மூலம் கருவூலத்தில் ஒப்படைக் கப்பட்டது

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.